[1971 டிசம்பர் 11

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) உதகை அரசினர் கல்கல்லூரிக்கு ரூ. 7.70 லட்சம் செலவில் பல்கலைக்கழக மான்யக் குழுவின் உதவியுடன் விடுதிக் கட்டிடம் கட்ட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. கட்டிட வேலை விரைவில் துவங்கப்படும்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, அந்த விடுதியில் கோடைக் காலத்தில் உல்லாசப்பயணிகள் தங்க அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிகிறது. அப்படித் தங்குவதற்கு அனுமதிக்கப்படுவதாக இருந்தால், நடுத்தர மக்கள் தங்கக்கூடிய அளவில் குறைந்த கட்டணம் வைத்து அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : உதகையில் உள்ள கலைக்கல்லூரி மாணவர்களுக்காகக் கட்டப்படும் விடுதியில் கோடைக்காலத்தில் சுற்றுலாவினர் தங்குவதற்கு ஏற்ற வகையில் வைப்பது நல்லது என்று மாவட்ட ஆட்சியாளர் கூறியுள்ளார். கல்லூரி கல்வி இயக்குநருக்கு அக்குறிப்பை அனுப்பிவைத்தார்கள். மாணவர்களின் வசதிக்காகக் கட்டப்படுகிற விடுதி வேறாக இருக்கும், சுற்றுலாவினர் தங்குவதற்காகக் கட்டப்படுகிற விடுதி வேறாக இருக்கும் என்றும், அது சுற்றுலாவினர் தங்குவதற்கு அவ்வளவு சரியாகப் பொருந்தி வராது என்ற கருத்தைக் கல்லூரி கல்வி இயக்குநர் அறிவித்து இருக்கிறார்கள். அந்த இரண்டு கருத்துக்களும் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கின்றன. அதை அரசாங்கம் பரிசிலித்துக்கொண்டிருக்கிறது. பரிசிலனை முடிந்தவுடன் முடிவு எடுக்கப்படும். 7.70 லட்சம் ரூபாய் செலவில் விடுதி கட்டுவது என்பது உறுதி. அதற்கு அனுமதி வழங்கப்பட்டுவிட்டது. யூ.ஜி. கமிஷனிடமிருந்து ரூ. 3 லட்சம் உதவி கேட்கப்பட்டிருக்கிறது. கூடிய விரைவில் வேலைகள் துவங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். மாணவர்களுக்கு மட்டும் பயன்படுமா அல்லது இரண்டுபேருக்குமே பயன்படுகிற வகையில் அமையுமா என்பது பிறகுதான் முடிவு செய்யப்படும்.

ஆசிரியர் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகள்

*251 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரம்ப ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு மாணவர்களைச் சேர்ப்பதை சிறிது காலம் நிறுத்தி வைக்கும் உத்தேசம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, ஆரம்பப் பள்ளி ஆசிரியர் பயிற்சிக்கு மாணவர்களைச் சேர்ப்பது இதற்கு முன்பு எப்போதாவது நிறுத்தி வைக்கப்பட்டதா அல்லது இனிமேலாவது அதைப் பரிசிலனைக்கு அரசு எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆரம்பப் பள்ளி ஆசிரியர் பயிற்சிக்கு மாணவர்களை எடுத்துக்கொள்வது அறவே நிறுத்தி வைக்கப்படவில்லை என்று சொன்னேன். தேவைப்படுகிற அளவில் வைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் ஓரளவுக்கு மாணவர்கள் சேர்ப்பதைக் குறைத்துக் கொண்டு வருகிறோம். ஏனென்றால் ஏற்கெனவே பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஏராளமாக இருப்பதால், அவர்களுக்கு வேலை

1971 டிசம்பர் 11]

கொடுத்து அந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு 2-3 ஆண்டுகள் ஆகும் என்கிற காரணத்தால், 1968-69-ல் 269 பிரிவுகளாக இருந்ததை, 227 பிரிவாக்கி, சென்ற ஆண்டு 200 பிரிவுகளாக அதைக் குறைத்து, இந்த ஆண்டு 160 பிரிவாக ஆக்கியிருக்கிறோம். அடுத்த ஆண்டு தேவையின் அடிப்படையில் இன்னும் பல பிரிவுகள் குறைக்க வேண்டி இருக்கும்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, ஆண்டுதோறும் பயிற்சி பெற்று வரும் ஆசிரியர்களில் அநேகம் பேர்கள் இன்றைய தினம் வேலை கிடைக்காமல், கூலி வேலை செய்து வருகிறார்கள். அப்படி வேலை இல்லாமல் இருக்கும் ஆசிரியர்களுக்கு விரைவில் வேலை கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வேலையில்லாமல் இருக்கும் ஆசிரியர்களுக்கு வேலை தருகிற அளவில்தான் 'அப்ரென்டீஸ்' ஸ்கீம் வைத்து 6,500 ஆசிரியர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முன்பு 269 பிரிவுகள் இருந்ததை மூன்று ஆண்டுகளில் 160 ஆகக் குறைத்து இருக்கிறோம். ஆண்டுதோறும் புதிதாக உருவாகிற பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் தேவைப்படும் என்பதை மனதில் வைத்துத்தான் ஓரளவுக்கு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்ப்பதைக் குறைத்து வந்திருக்கிறோம். அப்படி வேலை இல்லாமல் இருக்கும் ஆசிரியர்களின் பிரச்னை இன்னும் 2-3 ஆண்டுகளில் தீர்ந்துவிடும், அதற்கான வகையில் அரசு திட்டமிட்டு இருக்கிறது.

Madras Zoo

* 252 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that a number of animals in Madras Zoo are suffering from an attack of anthracosis; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம். இறந்த ஒட்டகச் சிவிங்கி, புள்ளிமான், சிங்கம் ஆகிய இவைகளில் செய்த பரிசோதனையில் அவைகளின் நுரையீரலில் ஆந்ரோகோசிஸ் என்ற நோய் உள்ளது எனத் தெரிய வருகிறது. நோயின் குணத்திற்குத் தக்கவாறு மாநகராட்சி கால்நடை மருத்துவர்களால் சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

DR. H. V. HANDE : Sir, is it not a fact that this particular area where the Zoo is now situated is so cramped that there is not enough space for the proper development of the Zoo. Also, because of the unhygienic conditions prevalent in the Zoo, these diseases take place. So, will the Government come forward to improve the hygienic conditions there or in the alternative to shift it to a better place?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்த இடம் மிக நெருக்கடியாக இருக்கிற காரணத்தாலும், ஜனநடமாட்டம் இருப்பதால் இரைச்சல் அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தாலும், காட்டிலே தன்னிச்சையாகத் திரிந்து வாழ்ந்த விலங்கினங்கள் இப்படிப்பட்ட இடத்தில் இருந்தால் பெரும் கேடு என்று மருத்துவர்கள் கண்டுபிடித்து இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, பக்கத்திலே சென்டிரல் ஸ்டேஷன் இருக்கிற காரணத்தால் ரயில் இன்ஜினிலிருந்து வருகின்ற புகையை அந்த விலங்கினங்கள் சுவாசிக்கிற காரணத்